1978 செப்டம்பர் 7]

திரு. பொ. உத்திராபதி :- பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடம், உப்பு சத்தியாகிரகம் நடந்த இடம் அது. சென்னையிலிருந்து வேதாரண்யத்திற்கு 538-வது எண் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. அது இடையில் நிறுத்தப்பட்டது. அதுபற்றி அமைச்சர் அவர்களைச் சந்தித்து அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அப்படி ஓடிக்கொண்டிருந்த பேருந்து இடையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டிய கேள்வி அல்ல. ஏற்கனவே சொன்னதைப் போல் அமைச்சரவர்கள் இதற்குத் தகவல் கையில் இல்லை என்றுதான் சொல்வார்கள். இது சேலம்-நாகை விரைவு வண்டி பற்றிய பிரச்னை; எனவே, தயவு செய்து தாங்கள் அமருங்கள். அடுத்த வினு 74.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சரவர்கள் இதற்குப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- நான் தேவையில்லை என்று சொல்லலாம். மூலக்கேள்வியைப் பார்த்து துணைக் கேள்விக்கு அனுமதி கொடுப்பதோ கொடுக்காமல் இருப்பதோ என்னுடைய உரிமை.

மேல்விஷாரத்தில் விரைவுப் பேருந்துகள் நின்று போதல்.

* வினு 74—திரு. துரை முருகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) வடாற்காடு மாவட்டம். மேல்விஷாரத்தில் அரசுப் போக்குவரத்துத் துரித வண்டிகள் நிற்க வேண்டும் என்று விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) 17-10-77-முதல் மேல்விஷாரம் வழியாகச் செல்லும் துரிதப்பேருந்துகள் வேண்டுகோளின் பேரில் அங்கு நிறுத்தப் படுகின்றன.